1973 பிப்ரவரி 10]

into touch with the Central Government and asked for higher quota and whether the Government have succeeded in getting a higher quota so that the farmers can be satisfied?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நம்முடைய மாநிலத்திற்கு உரம் எவ்வளவு தேவையோ அதற்கான டிமாண்டை அனுப்புகிறோம். ஆனால் அவர்கள் நாம் கேட்ட அளவு கொடுப்பதில்லை. அப்படிக் கொடுப்பதிலும் தாமதம் காட்டுகிறார்கள். இந்த ஆண்டும் கூட நாம் கேட்டதில் 32 சதவிகிதம் தான் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அதிகமாக வேண்டும் என்கிற கோரிக்கை நேற்றைய முன்தினம் நமது முதல்வர் அவர்கள் மத்திய அமைச்சர் திரு. ஷிண்டேயிடம் கூட வற்புறுத்தியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. ஹாண்டே அவர்களுடைய கேள்விக்கு ஒரு விளக்கம் அறிவிக்க விரும்புகிறேன். நேற்றைக்கு முன்தினம் மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்கள் என்னையும், உணவு அமைச்சர் அவர்களையும், கூட்டுறவு அமைச்சர் அவர்களையும் சந்தித்தார். நாங்கள் அவருடன் நீண்ட நேரம் இந்த உரம்பற்றி விவாதித்திருக்கிறோம். அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து கேரளா போன்ற மாநிலங்களுக்குத் தருவதற்காக அரிசி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் நாம் ஓரளவு ஒப்புதல் அளித்திருக்கிறோம். ஒரு லட்சம் டன் அரிசி வேண்டுமென்று மத்திய அரசின் சார்பில்—அதுவும் முக்கியமாக கேரளாவுக்கு அனுப்புவதற்காக என்று கேட்டபோது இந்த ஒரு லட்சம் டன் அரிசியைத் தர ஒத்துக்கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் இப்போது இந்தியாவில் பரவலாக பல்வேறு பகுதிகளில் உணவுப் பற்றுக்குறை நிலை ஏற்பட்டிருக்கிறபோது ஓரளவு தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருப்பதாலும், மற்றப் பகுதிகளின் குறையைப் போக்க இன்னும் அதிக அளவில் உணவு உற்பத்தியில் தொடர்ந்து கவனம் செலுத்த நமக்கு அதிகமான அளவு உரம் அளிக்கவேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். அதைத் தீவிரமாகக் கவனித்து ஆவன செய்வதாக உறுதி அளித்துச் சென்றிருக்கிறார்கள். அதன் விளைவாக ஆக்கப் பணிகள் நடைபெறும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

சர்க்கரை வழங்கல்

*** 117 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சர்க்கரை தட்டுப்பாடு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ?

(இ) இதைப்போக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) 1972-ம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி குறைவாகிவிட்டதாலும், கடந்த வருடங்களில் ஆலைகளில் தேங்கியிருந்த உபரி சர்க்கரை பூராவும் முன்பே பயன்படுத்தப்பட்டதாலும், நாடு முழுவதும் ஓரளவு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

(இ) சர்க்கரை ஆலைகளின் உற்பத்தியில் 70 சதவிகிதம் என்ற அளவில் சட்டபூர்வமாக கைப்பற்றப்பட்ட சர்க்கரை பொதுமக்களின் குடும்பத் தேவைக்குப் போதுமான அளவு கிலோ ரூ. 2.15 என்ற விலையில் அட்டைகள் மூலம் வழங்கப்படுகிறது. ஆகையால் சர்க்கரை விலை ஏற்றத்தால் குறைந்த வருமானமுள்ள பொதுமக்கள் பாதிக்கப்படவில்லை.

திரு. நா. வெ. குருசாமி: குறிப்பாக கிராமப்பகுதி மக்களுக்காக ஒதுக்கப்படுகிற சர்க்கரை நகரப் பகுதிகளிலேயே விற்கப்பட்டுவிடுகிறது. இதுபற்றி சென்ற கூட்டத் தொடரில்கூட நான் கேள்வி கேட்டிருக்கிறேன். அதிகாரிகளே இதற்கு உடந்தையாக இருந்து, முறைகேடான முறையில் நடந்துகொள்கிருர்கள். அவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினாது கேள்வி பொதுப்படையாக இருக்கிறது. கிராம மக்களுக்கும் சர்க்கரை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் கூட்டுறவு ஸ்தாபனங்கள் உள்ள இடங்களில் எல்லாம் கூட்டுறவு மூலமாகவே—அட்டைகள் கொடுத்து, அட்டைகளுக்கு ஒழுங்கான முறையில் சர்க்கரை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிருேம். எங்காவது தவருக நடப்பதுபற்றி உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கிறதா என்றும் அறியவிரும்புகிறேன். இதுபோல பொதுவாகக் கேள்வி கேட்காது, குறிப்பிட்ட இன்ன இடத்தில் இன்னமாதிரியாக நடந்திருக்கிறது என்பதாக உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயாளுல் நிச்சயம் நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.

திரு. ஆர். பொன்னப்பநாடார்: தலைவர் அவர்களே, சீனி வெளிமார்க்கெட்டில் ரூ. 3.65-க்கு விற்கப்படுகிறது. ஆகவே இன்னும் அதிகமான அளவுக்கு கூட்டுறவு மூலம் சீனி விநியோகம் செய்ய மாநில அரசு என்ன நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நம்முடைய மாநிலத்தில் மட்டும் நாம் மாதத்திற்கு 25 ஆயிரம் டன் என்கிற அளவில் வருடம் 3 லட்சத்து 6 ஆயிரம் டன் உற்பத்தி செய்கிருேம். அதில் மத்திய சர்க்கார்—கொள்முதல் சர்க்கரை—70 சதவிகிதம் எடுத்துக்கொள்கிருர்கள். 30 சதவிகிதம் வெளி மார்க்கெட்டில் விற்பதற்கு அனுமதித்துவிடுகிருர்கள். வெளி

1973 பிப்ரவரி 10]

மார்க்கெட் விலையைக் கட்டுப்படுத்தவோ, குறைக்கவோ நமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. நாம் மத்திய சர்க்காரிடம் நமது மாநிலத்தில் கொள் முதல் செய்யப்படுகிற மொத்த சர்க்கரையில் 50 சதவிகிதமாவது நமது மாநில உபயோகத்திற்காக என்று நமக்கு விடுவித்துவிட வேண்டும் என்று வற்புறுத்திவருகிறோம். ஆனால், அவர்கள் நமக்கு பத்தாயிரத்து எண்ணூறு டன் தான் கொடுக்கிறார்கள். அதுவும் இவ்வாண்டு ஒன்பதாயிரத்து முந்நூறு டன்னுக்குக் குறைத்து விட்டார்கள். இதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்ல, கூட்டுறவு மூலம் விநியோகிக்கிற சர்க்கரைக்கு விலை கிலோவுக்கு 2 ரூபாய்க்குமேல் போகக்கூடாது என்பதையும் நாம் வற்புறுத் தினோம். அவர்கள் ரூ. 2.15 ஆக நிர்ணயித்திருக்கிறார்கள். விலையைப்பற்றிக் கூடப் பரவாயில்லை. நாம் 90 ஆயிரம் கார்டுகள் வைத்திருக்கிறோம். இன்னும் அதிக அளவுக்கு கூட்டுறவு மூலம் சர்க்கரை விநியோகம் செய்ய மத்திய சர்க்கார் நமது மாநிலத்திற்கு—நமது மாநிலத்தில் கொள்முதல் செய்கிற சர்க்கரையில் 50 சதவிகிதத்தை ஒதுக்கிவிட வேண்டும் என்பதாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்னும் அதிகம் கொடுத்தால் நாமும் கூட்டுறவு மூலம் இன்னும் அதிக அளவுக்கு சர்க்கரை விநியோகம் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது. மு.ப. 10-0

திரு. ஆர். பொன்னப்பநாடார்: நமது மாநிலத்தின் தேவை எவ்வளவு? அந்தத் தேவைக்கு இன்னும் எவ்வளவு குறைவாக இருக்கிறது? அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு மத்திய அரசாங்கம் அவர்களுடைய கொள்கையை புனர் பரிசீலனை செய்வதற்கு இன்னும் அதிகமாக நம்முடைய மாநில அரசாங்கம் 'பிரஷர்' கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உற்பத்தியாவதில் 50 சத விகிதம் கொடுத்தால் தேவைக்குச் சரியாக இருக்கும் என்று சொல்லி யிருக்கிறோம். 12,000 டன்னாவது கொடுக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறோம். இதை எழுதியதற்குப் பிறகுதான் 10,800 டன் என்று கொடுத்துகொண்டு இருந்ததை 9,300 ஆக ஆக்கியிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, சர்க்கரை விநியோகம் செய்வதில், நம்முடைய நாட்டிற்குத் தேவைப்படுகின்ற அளவை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே 10,000 டன் கொடுக்கப் பட்டிருந்தது. இப்போது 9,000 ஆக குறைக்கப்பட்டிருக்கிறதென்பதால்